# திருப்பாண்டிக் கொடுமுடி

## வரலாறு

பதிப்பாசிரியர் :

ச. பிரகதம்

127, வடக்குத் தெரு

கொடுமுடி-637211.

விலை ரூ. 1-00.

© சபிரகதம் (1947)

கிடைக்குமிடம்
மா. சங்கரன்
127, வடக்குத் தெரு
கொடுமுடி-638151.

விலை 1-00

தமிழ் எழுத்துச் சீர்மைகள் :

1. உகர ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக் குறி இடுதல் (ஜுரம், ஜூலை)

2. உயிர் நெடில்களுக்குக் கால்வாங்குதல்
பூம்புகார் போற்றுதும், பூம்புகார் போற்றுதும்
வீங்க வீங்கு நீர் வேலி யுலகிற்கவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுகலான்.

தேனோலை
அச்சிட்டவர் :
நாரா. நாச்சியப்பன்
நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
சென்னை-600014.

வெளியிட்டவர் :
ச. பிரகதம் சென்னை-20.

# திருப்பாண்டிக் கொடுமுடி

## அமைவு

வான் பொய்த்தாலும், தான் பொய்யாது வளம் சுரக்கும் காவிரி நதியின் மேல்கரையில் அமைந்துள்ளது திருப்பாண்டிக் கொடுமுடி. ஈரோடு—திருச்சி செல்லும் புகைவண்டிப் பாதையில் 24 மைல் தொலைவில் அமைந்துள்ளது; ஐந்தாவது நிலையம் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தது, நொய்யலாறு காவிரியில் வந்து கலக்கும் கூடுதுறைக்கு மேற்கே 5மைல் தொலைவில் அமைந்துள்ளது. காவிரியைக் கடந்தால் சேலம் மாவட்டத்தையும், நொய்யலைக் கடந்தால் திருச்சி மாவட்டத்தையும் அடையலாம்.

## கொங்குத் தலம்

பண்டைத் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டிய நாடு தொண்டை நாடு, கொங்குநாடு என ஐந்து பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. சேலம், தர்மபுரி, கோவை, நீலகிரி மாவட்டங்களும் திருச்சி மாவட்டத்தில் கரூர், குளித்தலை வட்டங்களும், மதுரை மாவட்டத்தில் பழனி வட்டமும் கொங்கு நாட்டின் பகுதிகளாகும். கொங்கு நாட்டில் ஏழு சைவத்தலங்கள் சிறப்புடையன. அவை கரூர், வெஞ்சமாக்கூடல், பவானி, அவிநாசி, திரு முருகன் பூண்டி, திருச்செங்கோடு, திருப்பாண்டிக் கொடுமுடி ஆகியன. கொடுமுடி ஆறாவது தலம் ஆகும்.

## கறையூர்

திருப்பாண்டிக் கொடுமுடியின் பழைய பெயர் கறையூர். கறைசை எனவும் வழங்கப்படும். பேராசிரியர் இரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் தமது ஊரும் பேரும் என்ற நூலில் தேவும் திருவும் என்ற அத்தியாயத்தில் இதைப்பற்றி ஆராய்ந்துள்ளார். (காண்க: சேர்க்கை) பழம் பாடல்களிலும், கல்வெட்டுகளிலும் கறைசை, கறையூர் என்னும் பெயர் அதிகப் புழக்கத்தில் உள்ளது.

## மாவீரன் கொடுமுடி

சங்க காலத்தில் 'கொடுமுடி' என்ற பெயரில் குறுநில மன்னன் ஒருவன் இருந்துள்ளான். அவனது தலை நகரம் ஆமூர் ஆகும். கோட்டை, கொத்தளங்களுடன், பாதுகாப்பு மிக்கது அந்த ஆமூர். ஆமூர்க் கோட்டையில், மறைந்திருந்து பகைவர்களைத் தாக்கப் பொய்யறைகள் பல இருந்தன. குறும் பொறை மலையின் கிழக்கே அமைந்திருந்தது அந்த ஆமூர். விண்ணை முட்ட நெடிதுயர்ந்திருந்தது அம்மலை. காட்டுப் பூக்கள் அதன் சாரலில் பூத்துக் குலுங்கின. (அகம் 159).

ஆமூர் கவுதமன் சாதேவனார் தன் புலமைத் திறத்தால் கொடுமுடியைப் புகழ்ந்து பாடி, அவன் ஆதரவில் வாழ்ந்து வந்தார். நொய்யலாற்றங்கரையில் தற்போது அமைந்துள்ள பழையகோட்டை ஆனூர் என்று வழங்கப்படும். இதுவே அக் கால ஆமூராக இருக்கலாம் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எழுநூற்று மங்களத்தில் உள்ள கோயிலின் கதவு நிலையில் உள்ள கல்வெட்டு ஒன்றில் 'இது ஆமூரான் எழுத்து' என்று வருகின்றது.' அவனும் இந்த ஆமூரைச் சேர்ந்தவனாக இருக் கலாம். அறச்சலூர் தலைமலைக்கும், சென்னிமலைக்கும் நடுவில் குட்டிக் கரடு என்ற சிறுமலை உள்ளது. அதுவே குறும்பொறை மலை ஆகலாம். அதன் உச்சியில் தொன்மைச் சின்னங்களான வட்டக் கட்டிடத்தின் அழிபாடுகள் உள்ளன.

கொடுமுடியின் தலைநகரான ஆமூரின் புகழ் நெடுந் தொலைவு பரந்திருந்தது. புகழ் பெருகப் பெருகப் பகை பெருகு மன்றோ? அப்போது சேரநாட்டை ஆண்ட வானவன் ஒருவன் கொடுமுடியை அடக்கி அடிபணிய வைத்திட எண்ணித் தனது பெரிய யானைப் படையை அனுப்பி வைக்கின்றான். கொடு முடியின் வாள்வீச்சாலும், படைத்திறத்தாலும் அவ்யானைகள் தம் கொம்புகளை ஒடித்துக்கொண்டு திரும்பி ஓடிவிட்டன.

## பல்யானைச் செல்கெழு குட்டுவன்

அந்த வானவன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் ஆவன். இமயவரம்பனின் தம்பியாவான். பின்னர் அரியணை ஏறிய செங்குட்டுவனின் சிறிய தந்தையாவான். பல்யானைச் செல்

கெழு குட்டுவனின் யானைப்படை பெரும் புகழ் பெற்றது. ஒரு பகற்பொழுதில் வங்கக் கடல் நீரும், அரபிக் கடல் நீரும் ஒரு சேரக் கொண்டு வரக் கூடியவை. தனது படை தோற்று விட்டதைப் பொறுத்துக் கொள்ள முடியாத பல்யானைச் செல் கெழு குட்டுவன் தானே முன்னின்று படையெடுத்து வந்து கொடு முடியை வென்று ஆமூர்க் கோட்டையைத் தரை மட்டமாக்கு கிறான். புரவிப் படை, வேழப்படை, தேர்ப்படை, காலாட் படை அனைத்தையும் அனுப்பிப் போரிடுகிறான். ஐயவி என்னும் பொறியால் கோட்டைக்குள் வில் மழை பொழிகிறான். அகப்பா எனப்படும் உள்ளரணையும் தாக்கி ஆமூரை அழித்தே விடுகிறான். போர் வெற்றிக்குப்பின் அவனது படைஞர் நொய்ய லாற்றில் இறங்கி நீர் விளையாடியபோது எழுந்த குரலோசை பேய்களையும் அலற வைத்தது. (பதிற்றுப்பத்து-22).

**கவுதமனார்**

இதனைப் பாடிய புலவர் **பாலைக் கவுதமனார்** என்பர். முன்னர் ஆமூர்க் கொடுமுடியைப் பாடியவரும் இவரேயாவர். அவர் பாடியுள்ள அகநானூறு 159—ஆம் பாடல் பாலைத் திணை ஆகும். பாலை பாடுவதில் வல்லவர் ஆதலின் பாலைக் கவுத மன் எனப்பட்டார். வயது கூடிய காலத்தில் கவுதமனார் என்று ஆர் சேர்த்துக் கொள்ளப்பட்டது. கொடுமுடி இறந்ததும், அந் நாட்டினை மேற்கொண்ட பெருமன்னனான பல்யானைச் செல் கெழு குட்டுவனை அண்டிப் பல நன்மைகளை அடைந்தார். பதிற்றுப் பத்தின் மூன்றாம் பத்தினைப் பாடியவர் இவரே.

அந்தணர் குலத்தைச் சேர்ந்தவர். தான், தன் மனையாளோடு சுவர்க்கம் செல்ல வேண்டுமென்று விரும்பினார். அதற்காகப் பல யாகங்கள் செய்ய வேண்டுமென்றார். இவரது விருப்பங் களைப் பல்யானைச் செல்கெழு குட்டுவன் பூர்த்தி செய்து யாகங்கள் செய்ய உதவினான். வயதில் முதிர்ந்த பார்ப் பனரைக் கொண்டு சிறந்த முறையில் 9 யாகங்கள் நடை பெற்றன. பத்தாவது யாகத்தின் இறுதியில், பாலைக் கவுத மனாரும் அவரது பார்பினியும் மறைந்து விட்டார்கள் (காணா ராயினர்) என்று பதிகம் கூறுகிறது. இக் காலம் கி.பி. முதல் நூற்றாண்டாகும்.

## கொடுமுடி : ஊர் — பேர்

பழைய கோட்டையின் மிக அண்மையிலே தான் தற்போதைய திருப்பாண்டிக் கொடிமுடி உள்ளது. எனவே அத்தலைவனின் பெயருக்கும், ஊரின் பெயருக்கும் தொடர்புண்டு எனக் கருத இடமுண்டு. அக்கால ஆமூருக்கு மிக அண்மையில் உள்ள புண்ணிய நதி காவிரி தான். அதனால் அவனது ஈமக் கடன்கள் இங்கு நிறைவேற்றப்பட்டிருக்கலாம். அவனது வீரத்தையும், கொடையையும் போற்றி நடுகல் அமைத்து வழி பட்டிருக்கலாம். இதுவே காலப்போக்கில் ஈசனது திருநாமமாக வும், ஊரின் பெயராகவும் உருமாறி விட்டது. காவிரிக் கரையில் கண்டு பிடிக்கப்பட்ட பனிரண்டாம் நூற்றாண்டுக் கல்வெட்டு (ARE 284/1961-62) ச் செய்தி இதை உறுதிப்படுத்தும். திரைக் கொற்றவாயில் குடி ஈசனான ஆம்பரநாதப் பெருமானைப் பற்றிக் குறிக்கின்றது. ஆமூர்நாதன் என்பதே ஆம்பரநாதன் என மறுவியதாகக் கொள்ளலாம்.

## மகுடலிங்கர் — மகுடேசுவர்

திருபாண்டிக் கொடுமுடி ஈசனின் திருநாமம் தற்போது மகுடேசுவரர், மகுடலிங்கர், கொடுமுடி நாதர் எனப் பலவாறாக வழங்கி வருகின்றது. மகுடேசுவர் என்பது கொடுமுடி என்பதன் வடமொழி வழக்கு என்பது சொல்லாமல் விளங்கும். அப்பர், சுந்தரர், சம்பந்தர் காலத்திலும், வேள்விக் குடிச் செப்பேட்டுக் காலத்திலும் பாண்டிக் கொடுமுடி என்றே அழைக்கப்பட்டது' பின்னர் கல்வெட்டுக் காலமான 12, 13 நூற்றாண்டுகளில் கொடுமுடி மகாதேவர், 'கொடுமுடி ஆளுடைய நன்னாயானார். என்றும் அழைக்கப்பட்டது. தமிழ் நாட்டுத் தலங்களின் பெயர்கள் எல்லாமே கி.பி. பதினாலாம் நூற்றாண்டு வாக்கில் வடமொழிப் பெயரில் யாறி வழங்கின. அப்போதைய வடமொழி வேகம் காட்டாற்று வெள்ளம் போலத் திரண்டு வந்து தமிழ்ப் பெயர்களையெல்லாம் அழித்து விட்டுப் போய் விட்டன. பல ஊர்களில் பண்டைத் தமிழ்ப் பெயர்களின் காலத்தடம் கூட இல்லையெனில், அக்கால வடமொழி வெறி வேகத்தை அளவிடக் கருவி ஏது?

திருப்பாண்டிக் கொடுமுடியும், அதற்கு விதிவிலக்கு அல்ல ஈசனின் திருநாமம் மகுடலிங்கர் என மாறியது. எனினும் ஊருக்குக் கொடுமுடி என்ற பெயர் நிலைத்து விட்டது,

புதிதாக அமைக்கப்படும் நகரங்களில், ஆகம, சிற்ப விதிகளின் படி, சிவன் கோயில் நகரத்தின் வடமேற்கு மூலையில் அமையும். கொடுமுடியில் அவ்வாறு இல்லை. அதனால் முதலில் அமைந்த கோயிலைச் சுற்றி ஊர் வளர்ந்து விட்டது எனக் கொள்ளலாம்.

### சமயக் குரவர் நால்வர்

அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய சமயக் குரவர் மூவரும் திருப்பாண்டிக் கொடுமுடி வந்துள்ளனர். பாண்டிக் கொடுமுடி ஈசனைப் பாடிப் பரவச மடைந்துள்ளனர். அப்பர் பெருமான் திருக்குறுந்தொகை என்னும் ஐந்து பாடல்களைப் பாடியுள்ளார். திருக்கொடுமுடி என்றாலே தீவினை அகலும் என்பது அவர் வாக்கு.

புகழ் பெற்ற நமச்சிவாயப் பதிகம் என்னும் பத்துப் பாடல்களைச் சுந்தரமூர்த்தி நாயனார் இயற்றியுள்ளார். கற்றவர் தொழுது புகழும் பாண்டிக் கொடுமுடி எனப் பாராட்டுகின்றனர்.

திருஞானசம்பந்தர் தன் பதிகத்தால் இசைமாரி பொழிந்துள்ளார். கானமர் மஞ்ஞைகள் ஆடும் கோலக் காவிரி என மகிழ்ந்து போனார்.

மாணிக்க வாசகப் பெருமான், கொடுமுடி வந்ததாகத் தெரியவில்லை. எனினும் வைப்புத் தலமாகக் கொடுமுடியை நினைந்து பாடியுள்ளார். தில்லையிலருளிய ஆனந்தமாலையின் ஏழாவது பாட்டில்,

"அரிய பொருளே, அவிநாசி யப்பா,
பாண்டி வெள்ளமே"

என விளித்து வணங்குகிறார்.

### வேள்விக் குடிச் செப்பேடு

கி.பி. 765 முதல் 795 வரை அரசாண்டவன் பாண்டிய மன்னன் நெடுஞ்சடையன் பராந்தகன். அவன் தந்தை அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்ற தேர்மாறன். கொங்கு நாட்டில் பல போர்க்களங்களில் பங்கேற்று வெற்றியுலா வருகிறான். மழகொங்கத்தை அடிப்படுத்தியதும், காவிரியைத் தாண்டி

கொடுமுடி வந்து சேருகிறான். அப்போதே திருக்கோயில் சிறந்து விளங்கியது. எழில் சேர்ந்து நெடிதுயர்ந்திருந்தது கோயிலின் மதிற்சுவர். பசுபதி ஈசனைத் தெண்டனிட்டு வணங்கி, பொன்னும் மணியும் காணிக்கையாக வழங்குகிறான். வேள்விக் குடிச் செப்பேடு தேர்மாறனின் மகன் நெடுஞ்சடையன் வழங்கியது.

அதில் ஈசனின் பெயர் பசுபதி என வருவது கொண்டு அவன் வணங்கிய தலம் கரூர் பசுபதீச்சுரமாக இருக்கலாம் என்று சிலர் கருதுவர். கொடுமுடி ரசனையும் பசுபதி என்றழைக்கும் வழக்கம் இருந்ததால், இவ்வாறு வலிந்து பொருள் கொள்ள வேண்டுவதில்லை. புலவர் செ. இராசு வசம் வந்து சேர்ந்த ஓலைச் சுவடிகளில் ஒரு ஒத்தை ஓலை கிடைத்துள்ளது. ஒரு கட்டு ஓலையில் அது 37 வது ஏடு. "கொடுமுடி பசுபதி லிங்கர் பேரில்" என்று தலைப்பிட்டு "திங்களணி வேணியும்" என்று தொடங்கும் விருத்தம் உள்ளது. எனவே கொடுமுடி ஈசனையும் பசுபதி என்றழைக்கும் வழக்கம் தொடர்ந்து இருந்து வந்துள்ளதை அறியலாம்,

### சோழன் பூர்வ பட்டயம்

தமிழ் அரசாங்கத்தின் பழஞ்சுவடி நூலகத்தில் சோழன் பூர்வ பட்டயம் என்ற நூல் கிடைத்துள்ளது. அந்த செய்தி எழுத்துவடிவம் பெற்றது பிற்காலம். எனினும் நிகழ்ச்சிகள் நடந்ததாகச் சொல்லப்படும் காலம் மூன்றாம் குலோத்துங்கன் காலம். அவனுக்குக் கரிகால் சோழன் என்ற பெயரும் உண்டு.

கொங்கு நாடு அக்காலத்தில் சீர்திருத்தம் அடையாமல் இருந்ததாம், அதனால் ஆட்சி முறையைச் செப்பம் செய்ய கரிகாலன் தன் பரிவாரங்களுடன் வருகிறான். பல ஊர்களில் கோயில் கட்டி, குளம் வெட்டி விழா எடுக்கிறான். சிவன் கோயில்களில் விழா எடுக்குமுன் உள்ளூர் தேவதைகளுக்கு பலிபூசை செய்ய ஏற்பாடு செய்கிறான். சில இடங்களில் நரபலீ கூட நடக்கின்றது. அந்த வகையில் கரூரிலிருந்து கொடு முடிக்கு வருகிறார்கள்.

கொடுமுடியில் ஒவ்வொரு சாதிக்கும் ஒரு தலைவரை நியமிக்கின்றான். கோயிலுக்கு மானியம் விட்டு கல்லிலும் ஓலையிலும்

எழுதித் தருகிறான். கோயிலுக்கு புண்ணியாங்கம் செய்கிறான். முழு விவரத்தையும பிற்சேர்க்கையில் காண்க.

## கல்வெட்டுக்கள்

தற்போது வீரநாராயணப் பெருமாள் சந்நிதிக் கருவறையின் பின்புறம் ஒரே ஒரு கல்வெட்டு மட்டும் உள்ளது. ஆனால் சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு ஐந்து கல்வெட்டுக்கள் இருந்தன. திருக்கோயில் அவ்வப்போது புதுக்கப்படும் போது, அவர்களின் அறியாமையால் அவை அழிந்து விட்டன. மெக்கன்சி என்ற வெள்ளைக்காரர், அந்தந்த ஊரில் உள்ளவர்களையே பயன்படுத்தி, கல்வெட்டுக்களைப் படித்து காகிதத்தில் பிரதி செய்து வைத்திருந்தார். அவை மிகவும் பிழைபடப் படிக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் என்ற நூலில் அவற்றை அச்சிட்டுள்ளார். வாசகத்தில் படித்தவர்கள் பிழை செய்து இருந்தாலும், செய்தியை ஓரளவு யூகிக்க முடிகிறது.

புகலூரான் வாய்க்கால் கரை நந்தவனக் கட்டிடத்தில் ஒரு கல்வெட்டு இருந்ததாகத் தெரிகிறது. அதன் வாசகம் கிடைக்கவில்லை. காவிரிக் கரையில் இரண்டு கல்வெட்டுக்களை மைசூரிலுள்ள, தொல்லெழுத்துத் துறை படியெடுத்துள்ளது. ஆனால் அவற்றின் முழுவாசகம் வெளியிடப்படவில்லை. தற்போது அக்கற்கள் எங்குள்ளன என்றும் தெரிவில்லை.

கல்வெட்டுக்கள், சுந்தர பாண்டியன் வீர நாராயண ரவி வர்மன் முதலியோர் அளித்துள்ளனர். கல்வெட்டுக்களைப் பற்றித் தனியாக உள்ள கட்டுரையைக் காண்க.

## சேக்கிழார்

சிவன்பால் சிந்தை முழுவதும் செலுத்தியதால் சிறப்புப் பெற்ற சிவனடியார்கள் வரலாற்றைத் தொகுத்துத் தந்தவர் சேக்கிழார் பெருமான். இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி. 1133 முதல் 1146 வரை) அவையில் அமைச்சராகப் பணியாற்றியவர். அதனால் அக்காலத் தமிழ் நாட்டின் அரசியல் எல்லைகள், சமுதாயப் பண்புகள் முதலியவற்றைத் தெளிவாகத் தந்துள்ளார்.

ஞானசம்பந்தர் திருச் செங்கோட்டில் தரிசனம் முடித்துக் கொண்டு 'முப்புரி நூலுடன், தோலணி மார்பர் முனிவரோடும், செப்பரும் சீர் திருப்பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார்' எனக் கூறுகிறார் சேக்கிழார். பருவம் மாறாத பொன்னி நதி சூழ்ந்த பாண்டிக் கொடுமுடியார் பாதம் மருவி வணங்கி வளம் மிக்க தமிழ் மாலை சாத்தி மகிழ்ந்தாராம்.

சுந்தரர் சுற்றுலாவிலும் பாண்டிக் கொடுமுடி இடம் பெறுகிறது. ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்தில் இவை கூறப்படுகின்றன. நமச்சிவாயப் பதிகம் பாடி மகிழ்ந்ததைச் சுட்டிக் காட்டுகிறார்.

### அருணகிரி நாதர்

குமரக் கடவுளைப் பாடுவதையே தன் பணியாகக் கொண்டவர் அருணகிரியார், தவறான வழி மேற்சென்ற தன்னைத் தடுத்தாட்கொண்ட குமரவேளை ஊர் தோறும் சென்று வணங்கித் தன் சந்தத் தமிழால் பாடிப் பணிவார்.

கொடுமுடிக் குமரனை அணுகி 'இருவினைப் பிறவிக் கடலில் மூழ்கடித்துத் துன்புறுத்தாமல் திருவருட் கருணை பொழிய' வேண்டுகிறார். பின்னர் வயலூர் சென்று முக்தியடைகிறார். வயலூர் திருச்சிக் கருகில் உள்ள தலம் வயலூர் சென்ற பின்னும் மீண்டும் கொடுமுடிக் குமரனை நினைந்து புகழ்ந்து ஏத்துகின்றார்.

### சர் பிரான்சிஸ் புக்கானன்

கி.பி. 1800 இல், ஆங்கில ஆட்சியின் இந்திய ஆளுநர், மாண்பமை மார்க்கஸ் வெல்லெஸ்லி அவர்கள் இந்திய நாட்டின் கலை, பண்பாடு, வரலாறு பற்றி அறிந்து கொள்ள விரும்பினார். சர் பிரான்சிஸ் புக்கானன் என்ற அறிஞரை அழைத்து, நாடு முழுவதும் சுற்றிப் பார்த்து, வேளாண்மை, கலை, வாணிபம், சமயம், பழக்கவழக்கங்கள் இயற்கை, அரசியல்,பழமை வரலாறு பற்றி அறிக்கை தரும்படி கட்டளையிடுகிறார். இருப்புப் பாதைகள் போடுவதற்கு முந்திய காலம் சில உதவியாட்களை அழைத்துக் கொண்டு புறப்படுகிறார். திப்பு சுல்தானிடமிருந்து, கம்பெனி கைப்பற்றிய பகுதிகள், மைசூர் மன்னர் நாடு, கேரளம் முதலிய இடங்களில் பயணம். முதலில் சென்னையிலிருந்து

பயணமாகிறார். அவர் கண்டு, கேட்டவற்றை அவ்வாறே எழுதியுள்ளார். அருமை மிகுந்த ஆவணம் அது.

*1800* ஆம் ஆண்டு நவம்பர் பத்தாம் நாள் பாசூரிலிருந்து கொளாநல்லி வழியாகக் கொடுமுடி வந்து சேர்ந்தார். இந்தியாவில்தான் கண்ட காட்சிகளில் எல்லாவற்றிலும் இது அழகான வழி என்று உளமாரப் புகழுகிறார். இங்கிலாந்தைப் போல மரங்கள் செழித்து வளர்ந்திருந்தனவாம். "A great part of the route led me through a country fully cultivated and inclosed; and although not so well wooded as England, yet I think on the whole, the most beautiful that I have seen in India" என்பதே அவர் குறிப்பு. அப்போது கொடுமுடிக் கோவிலில் *11* பிராமணரும் *21* பேர் இசைஞரும், நடனமாதரும் இருந்தனராம். கோயில் மிகவும் எளிமையாக இருந்ததாம்; மக்கள் புதிய வீடு கட்டிக் கொள்ள அரசாங்கம் கடன் கொடுத்து உதவிற்றாம். புகளூர் வாய்க்காலைப் பற்றியும், பிராமணருக்கக்களிபபட்ட இனாம் பூமிகளைப் பற்றியும் கூறுகிறார். புக்கானன் அவர்களின் அறிக்கை *175* ஆண்டுகட்கு முந்திய கொடுமுடியைக் கண்முன் நிறுத்துகின்றது (பிற்சேர்க்கை காண்க).

### திருக்கோயில்

ஊருக்கு அணியாகத் திகழுவது மகுடேசுவரர் கோயில். இங்கு வீரநாராயணப் பெருமாளுக்கும் கோயில் உண்டு. வன்னி மரத்தடியில் பிர்மா எழுந்தருளியுள்ளார். பண்மொழியம்மை, திருமகள் ஆகிய திருக்காம கோட்டங்கள் உண்டு. அனுமார், சனி பகவான், சூரியன், சந்திரன், நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்கள் உண்டு. வடமொழியிலும், தமிழிலும் தலபுராணங்கள் உண்டு. வழிபட வந்தோர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

### படிமங்கள்

கோயிலில் பல புகழ் பெற்ற செப்புப் படிமங்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது திரிபுராந்தகர், நடராஜர், விஷ்ணு ஆகியன. *1961* ஏப்ரலில் வந்த லலித்கலா ஒன்பதாம் இதழில் இவை படங்களுடன் வெளியாகி உலகப் புகழ் பெற்றுள்ளன. தமிழகத் தொல்லியல் துறை இயக்குநர் Dr. நாகசாமி அவர்களே அக்கட்டுரை ஆசிரியராவர்.

### காவிரி

வடக்கே இருந்து ஓடிவந்த காவிரி இங்கு கிழக்கு நோக்கித் திரும்புகிறது. வட்டவாசிகை கொண்டு ஈசனது அடி தொழுவ தாகப் புலவர்கள் பாடியுள்ளனர். எனினும் காவிரியால் பாசனப் பயன் இங்கில்லை.

### பாசனம்

முப்போகம் விளையும் நஞ்சை நிலங்கள் சூழ்ந்ததுகொடுமுடி. பவானி காவிரியில் கலக்கப்படுவதற்கு முன்பு கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து காளிங்கராயன் வாய்க்கால் பிரிந்து வயலை விளைவிக்கின்றது. அதற்கும் மேலே கீழ்பவானி அணையின் சிவகிரிக்கிளை வாய்க்கால் பாசனம் தருகிறது. நெல்லும் கரும்பும், வாழையும். மஞ்சளும், கடலையும் இன்னும் எல்லாப் பயிர்களும் விளைந்து வளம். கூட்டுகின்றன.

# 2. கல்வெட்டுக்கள்

பண்டைக் காலத்தில் அரசாங்க ஒப்பந்தங்கள், நன்கொடைகள் பிற முதன்மையான செய்திகளைக் கல்லிலே பொறித்து வைத்தனர். கல்லில் முதலில் சாயத்தில் எழுதிக்கொண்டு. அதன் மீது கொத்தி பள்ளம் செய்தனர். அதனால் எக்காலத்தும் அழியாது இருந்தன. அவற்றை "குயிலெழுத்து" என்றும் கூறுவர். இவை பெரும்பாலும் பொது இடங்களில் வெட்டி வைக்கப்பட்டன. திருக்கோயில்கள் அவற்றைத் தாங்கி நின்றன. கோயில்கள் புதுக்கப்படும் போது, அக்கல்வெட்டுக்களை, ஓலையில் பிரதி செய்து வைத்துக் கொண்டு, புதுக்கோயில் பணி முடிந்ததும், ஓலையிலிருந்ததை மீண்டும் கல்லிலேயே செதுக்கும் வழக்கம் இருந்தது. பக்தி வேகம் கண்களை மறைத்த காலத்தில், புதுக்கிய பின்னர் செதுக்க மறந்தனர். அதனால் தமிழகத்தில் பல செய்திகள் அழிந்தன. ஒரு சிலரது ஆர்வமிக்க முயற்சிகளால், பல செய்திகள் இன்று நமக்குக் கிடைக்கின்றன.

ஆங்கிலேயர் ஆட்சியில் 'மெக்கன்சி' என்னும் பொறியாளர் (இஞ்சினியர்), நிலம் அளக்கும் துறைக்குத் தலைவராக இருந்தார். அவர் செல்லும் இடங்களிலெல்லாம், அந்தந்த ஊரில் உள்ளவர்களையே கொண்டு, அந்த ஊர்ச் செய்திகளை எழுதி வாங்கினார். கல்வெட்டுக்களை கண்களால் படித்து எழுதச் செய்தார். அவ்வாறு படித்தவர்களாலும், சரியாகப் படிக்க முடியவில்லை. ஆனால் தாம் படித்துப் புரிந்து கொண்டவாறு எழுதிக் கொடுத்துள்ளனர். அவை பிழைபட இருந்தாலும் தற்போது வரலாற்றிற்கு உதவும்படியாக உள்ளன. அவை தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் என்ற நூலில் அச்சிட்டு வெளியாகியுள்ளன.

கொடுமுடியில் ஐந்து கல்வெட்டுகள் இருந்தன. அவற்றுள் தற்போது கோயிலில் ஒரே ஒரு கல்வெட்டு மட்டும்தான் உள்ளது.

மற்றவை அழிந்து போய் விட்டன. மைசூரிலுள்ள தொல்லெழுத்தியல் துறை கொடுமுடி வந்து படியெடுத்தபோது காவிரிக் கரையில் இரண்டு கற்கள் கிடைத்துள்ளன. அவை எங்கே இருக்கின்றனவென்று தெரியவில்லை. இத்துறை இதன் முழு வாசகங்களை இன்னும் வெளியிடவில்லை. கேட்டு எழுதினாலும் அனுப்புவதில்லை. அதனால் அவற்றை ஆராய இயலாமல் உள்ளன. வாசகர் அறிந்து ஆராயும் பொருட்டு, தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள் என்ற நூலில் வெளியானவற்றை இணைத்துள்ளோம்.

இக்கல்வெட்டுக்கள் இரண்டு மன்னர்கள் காலத்தில் செதுக்கப்பட்டுள்ளன. ஒருவன் கோ வீர நாராயண ரவி வர்மன் என்ற சேர மன்னன். அடுத்தவன் திரிபுவனச் சக்கர கோனேரின்மை கொண்டான் சுந்தர பாண்டிய கேசரி வர்மன் என்பான். இவற்றில் கையொப்பமிட்டவர்கள் சுந்தர பாண்டிய காளிங்கராயன், பூந்துறை வேளான் நம்பெருமான், வெட்சியூர் உடையான் என்போர் ஆவர்.

## இரவி வர்மன்

251 ஆம் எண் கல்வெட்டு காண்க. கோ வீர நாராயண ரவி வர்மன் என்பது இவன் பெயர். இவன் பட்டம் ஏறிய பின் இருபத்தி ஏழாம் ஆண்டு வெட்டப்பட்டது. அவனது பிறந்த நாள் மாசி மாதம் வருகின்றது. அன்று பூசை செய்யவும், திருவிழா எடுக்கவும், அமுதுபடிக்கும், வேறு பல நிவந்தக்களுக்குமாக நன்கொடை அளிக்கிறான். அதிராஜராஜ மண்டலத்துக் காவிரி நாட்டுக் கறையூர் திருப்பாண்டிக் கொடுமுடி மகாதேவர் என்று ஈசன் பெயர் கூறப்படுகிறது. பொன்னை நிறுத்து வழங்குகிறான். மேல்கரை அரைய நாட்டு ஊஞ்சலூரைத் தானமாக வழங்கி அதிலுள்ள எல்லா வருமானங்களையும் கோயிலுக்கே அளிக்கின்றான், எல்லைகள் வருமாறு; கிழக்கே — எழுகரை, ஆனங்கூர், குமரிக்கயம் தெற்கு—எட்டுக்கரடு மன்னாங்காடு மேற்கு அத்திரப்பள்ளி, களுந்தபாரை(?), மூசுகரை வடக்கு—பிலிக்கல்லூர். இந்த மன்னன் யாராக இருக்கலாம் என்பதற்கு நாமக்கல்லில் கண்டு பிடிக்கப்பட்ட உதயேந்திரம் செப்பேடு தகவல் தருகிறது. ARE 1911 இன் அறிக்கையில் சேர மன்னர்களைப் பற்றிய குறிப்பு வருகிறது. இவர்கள்

முதல் பராந்தகன் (சோழன்) அனுமதியுடன் கொங்கு நாட்டை ஆண்டுள்ளதாகத் தெரிகின்றது. Epigraphica Indica Vol II[1] pp 79—82 காண்க.

**சுந்தர பாண்டியன்**

திரிபுவனச் சக்கரவர்த்திகள், கோனேரின்மை கொண்டான் சுந்தர பாண்டியன், கேசரி வர்மன் என்று பட்டங்களும் பெயர் களும் கொண்ட கொங்கு பாண்டியன். இவனது காலம் கி.பி 1285 முதல் 1300 வரை, இவன் பட்டம் ஏறி இரண்டாம் ஆண்டு, சித்திரை 24 (எண் 255), இரண்டாம் ஆண்டு மாசி 14 (எண் 251) மூன்றாம் ஆண்டு, தை மாதம் (எண் 252) ஆறாம் ஆண்டு 36ம் நாள் (எண் 253), பதினான்காம் ஆண்டு (எண் 255) ஆகிய காலங்களில் வெட்டப்பட்டுள்ளன.

**எண் 255**

கொடுமுடியில் அமைந்திருந்த **உலக விடங்கத் திருக்கா வணம்** என்ற பந்தலில் இருந்து கொண்டு, பூந்துறை நாட்டார், அவர்கள் நாட்டைச் சேர்ந்த **கண்டிய தேவ நல்லூர்** என்ற ஊரினை, ஈசனுக்கு நன்கொடையாக வரியில்லாத நிலமாக அளிக்கின்றனர், இதன் எல்லா வருமானங்களும் மாசிமகத் திருவிழாவிற்கும், அமுதுபடி, சாத்துபடிக்கும் பயன்படும்.

**எண் 251**

இக்கல்வெட்டு முன் பகுதி சிதைந்துள்ளது. எனினும் இது தற்போது பெருமாள் சோ·லின் கருவறைச் சுவரில், மேற்குப் பிரகாரத்தில் செல்லும்போது படிக்கலாம்.

ஈசனது பூசைக்கும், கருடாழ்வார் பூசைக்குமாக எட்டு ஊர் கள் தானமாக வழங்கப்படுகின்றன. அவை ஊஞ்சலூர், வள்ளி புரம், வடிவுடை மங்கலம், ஐநகர், திருக்காடுதுறை, வெதிரி மந்தை (திருச்சிற்றம்பல நல்லூர்), எழுநூத்தி மங்களம். ஒரு பழம் பாடலாலும் இந்த செய்தி உறுதிப்படும். அது வருமாறு:

உலகுபுகழ் தலையநல்லூர் வெண்கம் பூருடன்
உயர்ச்சிபெறும் அஞ்சூரதும்
உசிதமிகு புகழ்குலவு மொஞ்சனூர் கொலங்கோயில்
உண்மையுள நயகொந்தளம்

நலமிகும் துக்காச்சி கார்வழிக் கிராமம் இரு
நான்குமேல் கரையரையநன்
நாடதற் குரியவாம் தானக் கிராமமிகு
நான்குமகு டேசலிங்கர்
தலமெனுங் கறைசையம் பதிவிதரி மிகுநலம்
சார்ந்தவெழு நூற்றுமங்கை
தங்குமிள வரசநல்லூர் வள்ளிபுர மெழில்
தான் கொள்வடி வுள்ளமங்கை
நிலைமைபெறும் ஊஞ்சலூர் திருக்காடு துறையென
நிகழ்த்துபதி பொன்னி காஞ்சி
நீண்டஅனு மாநதி துலங்கு நன்னீதிகள்
நிரைந்து வளர் அரைய நாடே.

இவ்வெட்டு கிராமங்களும் தற்போதும் தானக்கிராமங்கள் என்று வழங்கப்படுகின்றன. குலாலர் எனப்படும் குயவர் குடி வழி முறைகளில் இவற்றை அறியலாம். அரைய நாட்டைச் சேர்ந்த இந்த எட்டு ஊருக்கும், கோயில் பூசை, குடி உரிமை முதலான வற்றை நிறைவேற்றுவதற்காக, அரைய நாட்டுக் குலாலரை நீக்கி, தட்டைய நாட்டுக் குலாலரை அமர்த்தியுள்ளனர். தொன்றுதொட்டு வந்த உரிமை இன்றும் நீடிக்கிறது.

திருக்காடுதுறை நொய்யலை அடுத்துள்ள கிராமம். அதன் எல்லை ஆர்நாட்டாமலை அடிவாரம் வரை உள்ளது. அதாவது அரைய நாட்டு எல்லை அம்மலை அடிவாரம் வரை உள்ளது. எனவே அதன் ஆதிகாலப் பெயர் அரைய நாட்டு மலை என்று இருந்து பின்னர் ஆர்நாட்டாமலை என மருவியதாகச் சிலர் கருதுவர் (ஆய்வுத்தேன்—நூல் காண்க.)

**எண் 252**

இதில் மன்னர் பெயர் சிதைந்துள்ளது. "கோனேரின்மை கொண்ட ... பாண்டியரான" என்றுள்ளது. இதனடியில் ஒப்ப மிட்டுள்ளவன் சுந்தர பாண்டிய காளிங்கராயன் என்பவன். எனவே மன்னன் பெயரும் சுந்தர பாண்டியன் என்பதில் ஐய மில்லை.

இதில் பாண்டிய மண்டலத்தைச் சேர்ந்த முத்தூர் கூற்றத்தைச் சேர்ந்த மயிலூர் உடையான் இளைய பிள்ளை யாருக்கு (முருகனுக்கு)ம், கோயில் அமைத்த செய்தி தெரி கின்றது. அவன் ஈசனுக்கும், பெருமாளுக்கும் பூசைப்படி

நைவேத்தியங்களுக்கு முதலீடாக ஐந்து பொன் வைக்கிறான் வருமானத்தில் இரண்டு கூறு எடுத்து முருகனுக்கும், கருடாழ்வாருக்கும் பூசை நடக்க ஏற்பாடாகிறது.

**எண் 253**

திருச்சிற்றம்பல நல்லூர் என்ற வெதிரி மங்கையில்' வெள்ளைக்குளம் என்ற ஏரி பாழ்பட்டுத் தூர்ந்து இருந்தது. அதைச் செப்பனிட்டு. நீர்வரத்துக்காக ஒரு ஓடையில் அணை கட்டப்பட்டது. அந்தப் பாய்ச்சல் நிலத்தில் பன்னீரடிக் கோலால் அளந்தால் 500 குழி கொண்டது ஒரு மாவாக 20 மாநிலம் தானமாக வழங்கப்படுகிறது. இதில் நாலுமா அரைய நாட்டாருக்கும், நகரத்தாருக்கும் வரியாகச் செலுத்தியது போக மிஞ்சியதை கொடுமுடி ஈசனுக்கும், வெதிரி மங்கை ஈசனுக்குமாக பகிர்ந்தளிக்கப்படுகிறது. கொடுத்தவர் யார் என்ற விவரம் இல்லை.

**எண் 255**

இதன்பின் பகுதியாக உள்ள பகுதியில் வேங்கல நாட்டு வளித்தன் குறிச்சி என்னும் 'ஊர் இறையில்லா தேவதானமாக வழங்கப்பட்ட செய்தி கூறப்படுகிறது.

**ARE 283/61—62**

இது தற்போதுள்ள கல்வெட்டு 351ம் எண் காண்க.

**ARE 284/61—62**

காவேரிக் கரையில் இருந்த கல். தற்போது காணக் கிடைக்கவில்லை.

இது இராசகேசரி வர்மன் என்ற கொங்குமன்னன் காலத்து எழுத்தமைதி கொண்டு கி.பி. 12ம் நூற்றாண்டு எனக் கணித்துள்ளார். முழுமையாக இல்லை. திருக்கொற்ற வாயில் குடி ஈசனான ஆம்பரநாதப் பெருமான்—என்ற பெயர் வருகிறது:

**ARE 285/61—62**

அதே இடத்திலுள்ள இன்னொரு கல். இதுவும் முழுமையாக இல்லை. 11ம் நூற்றாண்டு எழுத்தமைதி கொண்டுள்ளது பூசை அமுதுபடிக்கு நன்கொடை அளித்தமை புலப்படுகிறது.

பூங்கா நந்தவனத்தில் ஒரு கல்வெட்டு இருந்ததாகவும் தெரிகிறது. காவிரிக் கரைக் கற்களும் காணவில்லை. காண்போர் கீழ்க்கண்ட முகவரிக்கு அஞ்சலட்டையில் தகவல் அனுப்புக.

ச. பிரகதம், 127, வடக்குத் தெரு, கொடுமுடி—638151,

# கொடுமுடி பற்றிய குறிப்புகள்

**கலைக் களஞ்சியம்**

கொடுமுடி. தமிழ் நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஈரோடு தாலுகாவில், ஈரோட்டிற்குத் தென் கிழக்கில் 21 மைல் தொலைவிலுள்ள தலம். காவிரியின் கரையில் உள்ளது. இங்குள்ள சிவன் கோயில் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப் பெற்றது. இது கொங்கு சிவத் தலங்கள் ஏழில் உள்ளது.

கொடுமுடி: ஒரு வீரன். குறும் பொறை மலைக்குக் கிழக்கேயுள்ள ஆமூரில் வாழ்ந்தவன். பெரிய யானைப் படையுடன் வந்து எதிர்த்த சேரனை வென்று தன் ஆமூரைக் காத்தவன். (அகம் 159)

**Tamil Lexicon Vol II Part I**

கொடுமுடி: A Siva Shrine in Coimbatore District

பாண்டிக் கொடுமுடி : A Siva Shrine in Konku-natu now identified with Kodumudi in Coimbatore District கொங்கு நாட்டின் ஏழு சிவத் தலங்களிலொன்றும் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ளதுமான கொடுமுடி என்னும் சிவத் தலம்.

## 3. COIMBATORE GEZETTIER

### 1898 EDITION

*Kodumudi*

21, Miles south south-east of the Erode is situated on the banks of the cavery; it is a thriving wet village, with a market much frequented by grain merchants. It has a police station, a a local fund hospital, a sub registrar's Office, a post Office, a railway station, and a chatram. According to census of 1891 there were 4020 in habitants, of whom 940 are traders. There is an ancient Siva temple, well sculptured. It is one of the seven kongu sivalayams. A market is held here once a week on Monday.

### 1933 EDITION-ADDITION

Messrs. Wilson & Co., started a sugar refinery in this place, but had to abandan it after a few years. The buildings have been purchased by the district board for use as a travellers bungalow. Extensive repairs to the Siva temple was made by Nattukottai chetties, the temple being one of the seven important Sivalayams in the Kongu Nadu. In 1923 an andi with a heavy load plaited hair on his head and dressed in a pink of dhoti raised subscriptions from local people and built a temple to Subramanya opposite the Siva temple. He also built a matam with a cellar by it, in the latter of which he desired that his body should be deposited after his death. The man subsequently left the place leaving this temple and matam in charge of trustees. It is believed this andi was able to cure diseases by his touch. He was originally an illiterate coolie and came to Kodumudi in 1918.3

# 4. இரா. பி. சேதுப்பிள்ளை — ஊரும் பேரும்

## அத்தியாயம் : தேவும் திருவும்

### கறையூர் — திருப்பாண்டிக் கொடுமுடி :-

கொங்கு நாட்டைச் சேர்ந்த திருப்பாண்டிக் கொடுமுடி பாடல் பெற்றதொரு பழம்பதி. காவிரியாற்றங் கரையில் இனிதமைந்துள்ள இப்பதியை

"பரந்திழி காவிரிப் பாங்கர்ப்
பாண்டிக் கொடு முடியாரே"

என்று பாடினார் திருஞான சம்பந்தர். இங்ஙனம் ஈசனார் அமர்ந்தருளும் பாண்டிக் கொடுமுடி என்னும் திருக்கோயில் கறையூர் என்ற ஊரைச் சேர்ந்ததென்பது தேவாரப் பாட்டால் விளங்குவதாம்.

கற்றவர் தொழுதேத்தும் சீர்கறை
யூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும்
சொல்லுநா நமச்சிவாயவே

என்பது தேவாரம். இக்காலத்தில் கறையூர் என்னும் பெயர் மறைந்து கொடுமுடி என்ற கோயில் பெயரே ஊருக்கு அமைந்து விட்டது. எனினும் இறைவன் கறையூரில் உறைகிறான் என்பது,

"கறையூர் கருப் பறியல் கன்றாப் பூரும்
கயிலாய நாதனையே காணலாமே"

என்ற திருநாவுக்கரசர் வாக்கால் தெளியலாகும்.

# 5. அகநானூறு-159-பாலை

தெண் கழி விளைந்த வெண் கல் உப்பின்
கொள்ளை சாற்றிய கொடு நுக ஒழுகை
உரனுடைச் சுவல பகடு பல பரப்பி
உமண் உயிர்த்து இறந்த ஒழிகல் அடுப்பின்,
வடி உறு பகழிக் கொடு வில் ஆடவர்
அணங்குடை நோன் சிலை வணங்க வாங்கி,
பல் ஆன் நெடு நிரை தழீஇ, கல்லென
அரு முனை அலத்த பெரும் புகல் வலத்தர்.
கனை குரல் கடுந் துடிப் பாணி தூங்கி,
உவலைக் கண்ணியர், ஊன் புழுக்கு அயரும்
கவலை, 'காதலர் இறந்தனர்' என, நனி
அவலம் கொள்ளல்மா, காதல் அம் தோழி!
விசும்பின் நல் ஏறு சிலைக்கும் சேண் சிமை
நறும் பூஞ் சாரற் குறும்பொறைக் குணாஅது—
வில் கெழு தடக்கை வெல் போர் வானவன்
மிஞிறு மூசு கவுள சிறுகண் யானைத்
தொடி யுடைத் தட மருப்பு ஒடிய நூறி,
கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடு மதில்
சேண் விளங்கு சிறப்பின் — ஆமூர் எய்தினும்,
ஆண்டு அமைந்து உறையுநர் அல்லர், நின்
பூண் தாங்கு ஆகம் பொருந்துதல் மறந்தே.

பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது. ஆமூர் கவுதமன் சாதேவனார்.

# 6. பதிற்றுப் பத்து
# மூன்றும் பத்து
# 22 வென்றிச் சிறப்பு

சினனே, காமம், கழி கண்ணோட்டம்,
அச்சம், பொய்ச் சொல், அன்பு மிக உடைமை
தெறல் கடுமையொடு பிறவும், இவ் உலகத்து
அறம் தெரி திகிரிக்கு வழியடை ஆகும்!
தீது சேண் இகந்து, நன்று மிகப் புரிந்து,
கடலும் கானகமும் பல பயம் உதவ;
பிறர் பிறர் நலியாது வேற்றுப் பொருள் வெஃகாது,
மை இல் அறிவினர் செவ்விதின் நடந்து, தம்
அமர்துணைப் பிரியாது, பாத்து உண்டு, மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணி இன்று கழிய;
ஊழி உய்த்த உரவோர் உம்பல்!
பொன் செய் கணிச்சித் திண் பிணி உடைத்துச்
சிரறு சில ஊறிய நீர் வாய்ப் பந்தல்,
கயிறு குறு முகவை மூயின மொய்க்கும்
ஆ கெழு கொங்கர் நாடு அகப்படுத்த,
வேல் கெழு தானை, வெருவரு தோன்றல்!
உளைப் பொலிந்த மா,
இழைப் பொலிந்த களிறு,
வம்பு பரந்த தேர்,
அமர்க்கு எதிர்ந்த புகல் மறவரொடு,
துஞ்சு மரம் துவன்றிய, மலர் அகன் பறந்தலை
ஓங்கு நிலை வாயில் தூங்குபு தகைத்த
வில் விசை மாட்டிய விழுச்சீர் ஐயவி,
கடி மிளைக் குண்டு கிடங்கின்,
நெடு மதில் நிரைப் பதணத்து,

அண்ணல் அம் பெருங்கோட்டு அகப்பா எறிந்த,
பொன் புனை உழிஞை வெல் போர்க் குட்டுவ!
போர்த்து எறிந்த பறையால் புனல் செறுக்குநரும்,
நீர்த்தரு பூசலின் அம்பு அழிக்குநரும்,
ஒலித் தலை விழவின் மலியும் யாணர்
நாடு கெழு தண் பணை சீறினை ஆதலின்,
குடதிசை மாய்ந்து, குண முதல் தோன்றி,
பாய் இருள் அகற்றும்; பயம் கெழு பண்பின்,
ஞாயிறு கோடா நன் பகல் அமயத்து,
கவலை வெண் நரி கூஉம் முறை பயிற்சி,
கழல் கண் கூகைக் குழறு குரற் பாணிக்
கருங்கட் பேய் மகள் வழங்கும்
பெரும் பாழ் ஆகும்மன்; அளிய தாமே!

துறை : வஞ்சித் துறைப் பாடாண் பாட்டு.

வண்ணம் : ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும்

தூக்கு : செந்தூக்கும் வஞ்சித் தூக்கும்

பெயர் : கயிறு குறு முகவை.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக் கவுதமனார் பாடியது.

# 7. மூன்றாம் பத்தின் பதிகம்

இமைய வரம்பன் தம்பி அமைவர
உம்பற்காட்டைத் தன் கோல் நிறீஇ
அகப்பா எறிந்து, பகல் தீ வேட்டு
மதி உறழ் மரபின் முதியரைத் தழீஇ,
கண் அகன் வைப்பின் மண் வகுத்து ஈந்து,
கருங்களிற்று யானைப் புணர் நிரை நீட்டி,
இருகடல் நீரும் ஒரு பகல் ஆடி,
அயிரை பரைஇ, ஆற்றல்சால் முன்பொடு
ஒடுங்கா நல் இசை, உயர்ந்த கேள்வி,
நெடும்பாரதாயனார் முந்துற, காடு போந்த
பல் யானைச் செல்கெழு குட்டுவனைப்
பாலைக் கவுதமனார் பாடினார் பத்துப் பாட்டு.

பாடிப் பெற்ற பரிசில்; 'நீர் வேண்டியது கொண்மின்' என,

'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும்' என பார்ப்பாரிற் பெரியோரைக் கேட்டு, ஒன்பது பெரு வேள்வி வேட்பிக்க, பத்தாம் பெரு வேள்வியில் பார்ப்பானையும் பார்ப்பனியையும் காணாராயினர்.

இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருபத்தைந்து யாண்டு வீற்றிருந்தான்.

# தேவாரப் பதிகங்கள்

## 8. திருஞான சம்பந்தர்

பெண்ணமர் மேனியினாரும் பிறைபுல்குசெஞ் சடையாரும்
கண்ணமர் நெற்றியினாருங் காதமரும் குழையாரும்
எண்ணமருங் குணத்தாரு மிமையவரேத்த நின்றாரும்
பண்ணமர் பாடலினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 1

தலைக்கணிமா மலர்கொண்டு தாள்தொழுவா ரவர்தங்கள்
வினைப்பகையா யினதீர்க்கும் விண்ணவர்விஞ் சையர்நெஞ்சில்
நினைத்தெழுவார் துயர்தீர்ப்பார் நிறைவளைமங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரிபோர்த்தார் பாண்டிக் கொடுமுடியாரே. 2

சடையமர் கொன்றையினாருஞ் சாந்தவெண் ணீரணிந்தாரும்
புடையமர் பூதத்தினாரும் பொறிகிளர்ப்பாம் பசைத்தாரும்
விடையமருங் கொடியாரும் வெண்மழுமூ விலைசூலப்
படையமர் கொள்கையினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 3

நறைவளர் கொன்றையினாரு ஞாலமெலாந் தொழுதேத்தக்
கறைவளர் மாமிடற்றாருங் காடரங்காக் கனலேந்தி
மறைவளர் பாடலினோடு மன்முழவங் குழன்மொந்தை
பறைவளர் பாடலினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 4

போகமுமின் பமுமாகிப் போற்றியென்பா ரவர்தங்கள்
ஆகமுறைவிட மாகவமர்ந்தவர் கொன்றையினோடும்
நாகமுந் திங்களுஞ் சூடிநன்னுதன் மங்கைதன்மேனிப்
பாகமுகந் தவர்தாமும் பாண்டிக் கொடுமுடியாரே. 5

கடிபடு கூவிளமத்தங் கமழ்சடைமே லுடையாரும்
பொடிபட முப்புரஞ்செற்ற பொருசிலையோன் றுடையாரும்
வடிவுடை மங்கைதன் னோடுமணம்படு கொள்கையினாரும்
படிபடுகோ லத்தினாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 6

ஊனமர் வெண்டலையேந்தி யுண்பலிக்கென் றுழல்வாரும்
தேனமரும் மொழிமாது சேர்திரு மேனியினாரும்
கானமர் மஞ்ஞைகளாலுங் காவிரிக் கோலக்கரைமேல்
பானலநீ றணிவாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 7

புரந்தரன் தன்னொடுவானோர் போற்றியென்றேத்த நின்றாரும்
பெருந்திறல் வளரக்கன்னைப் பேரிடர்செய் துகந்தாரும்
கருந்திரைமா மிடற்றாருங் காரகில்பன் மணியுந்திப்
பரந்திழிகா விரிப்பாங்கர்ப் பாண்டிக் கொடுமுடியாரே. 8

திருமகள் காதலினானுந் திகழ்தருமா மலர்மேலைப்
பெருமகனு மவர்காணாப் பேரழலாகிய பெம்மான்
மருமலி மென்மலர்ச்சந்து வந்திழி காவிரிமாடே
பருமணிநீர்த் துறையாரும் பாண்டிக் கொடுமுடியாரே. 9

புத்தரும் புந்தியிலாதசமணரும் பொய்ம் மொழியல்லால்
மெய்த்தவம் பேசிடமாட்டார் வேடம் பலபலவற்றால்
சித்தருந் தேவருங்கூடிச் செழுமலர்நல் லனகொண்டு
பத்தியினாற் பணிந்தேத்தும் பாண்டிக் கொடுமுடியாரே. 10

கலமல்குதண் கடல்சூழ்ந்த காழியுண்ஞான சம்பந்தன்
பலமல்குவெண் டலையேந்திப் பாண்டிக்கொடுமுடி தன்னைச்
சொலமல்குபா டல்கள்பத்துஞ் சொல்லவல்லார் துயர்தீர்ந்து
நலமல்குசிந் தையராகி நன்னெறியெய்துவர் தாமே. 11

## 9. சுந்தரமூர்த்தி நாயனார்

1 மற்றுப்பற்றெனக் கின்றிநின்திருப்
பாதமேமனம் பாவித்தேன்
பெற்றலும்பிறந் தேனினிப்பிற
வாததன்மைவந் தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

2 இட்டனுமடி யேத்துவாரிகழ்ந்
திட்டநாள்மறந் திட்டநாள்
கெட்டநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர் புனற்காவிரி
வட்டவாசிகை கொண்டடிதொழு
தேத்துபாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினும்
சொல்லுநா நமச்சிவாயவே.

3 ஒவுநாளுணர் வழியுநாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றலாற்கரு
தேன்கிளர் புனற்காவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

4 எல்லையில்புக ழெம்பிரானெந்தை
தம்பிரானென் பொன்மாமணி
கல்லையுந்திவளம் பொழிந்திழி
காவிரியதன் வாய்க்கரை
நல்லவர்தொழு தேத்துஞ்சீர்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவ ுவுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

5 அஞ்சினார்கர ணாதியென்றடி
யேனுநான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற்கரு
ளல்கினாய்க்கழிக் கின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்டநான் மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

6 ஏடுவானிளந் திங்கள்சூடினை
யென்பின்கொல்புலித் தோலின்மேல்
ஆடுபாம்பதரைக் கசைத்தவழகனே
யந்தண் காவிரிப்
பாடுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிபாண்டிக் கொடுமுடி
சேடனேயுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

7 விரும்பிநின் மலர்ப் பாதமேநினைந்தேன்
வினைகளும் விண்டனன்
நெருங்கிவண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்றகாவிரிக் கோட்டிடைக்
குரும்பைமென்முலைக் கோதைமார்குடைந்
தாடுபாண்டிக் கொடுமுடி
விரும்பனேயுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

8 செம்பொனேர்சடை யாய்திரிபுரந்
தீயெழச்சிலை கோலினாய்
வம்புலாங்குழலாளைப் பாகமமர்ந்து
காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில்கூவமாமயி
லாடுபாண்டிக் கொடுமுடி
நம்பனேயுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

9 சாரணன்றந்தை யெம்பிரானெந்தை
தம்பிரானென்பொன் மாமணியென்று
பேரெணாயிரகோடி தேவர்பிதற்றி
நின்று பிரிகிலார்
நாரணன்பிரமன் றொழுங்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்மறக்கினும்
சொல்லும்நா நமச்சிவாயவே.

10 கோணியபிறை சூடியைக்கறை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
பேணியபெரு மானைப்பிஞ்ஞகப்
பித்தனைப்பிறப் பில்லியைப்
பாணுலாவரிவண் டறைகொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாணனைத்தொண்ட னூரன்சொல்லிவை
சொல்லுவார்க் கில்லைதுன்பமே.

## 10. திருநாவுக்கரசர் திருக்குறுந்தொகை

சிட்டனைச் சிவனைச் செழுஞ் சோதியை
அட்ட மூர்த்தியை யால நிழலமர்
பட்டனைத் திருப் பாண்டிக் கொடுமுடி
நட்டனைத் தொழ நம்வினை நாசமே. 1

பிரமன் மாலறியாத பெருமையன்
தரும மாகிய தத்துவ னெம்பிரான்
பரம னாருறை பாண்டிக் கொடுமுடி
கரும மாகத் தொழுமட நெஞ்சமே. 2

ஊசலா ளல்லள் ஓண்கழ லாளல்லள்
தேசமாந் திருப் பாண்டிக் கொடுமுடி
ஈசனே யெனு மித்தனை யல்லது
பேசமா றறியா ளொரு பேதையே. 3

தூண்டிய சுடர்போ லொக்குஞ் சோதியான்
காண்டலு மெளியன் னடியார் கட்குப்
பாண்டிக் கொடுமுடி மேய பரமனைக்
காண்டு மென்பவர்க் கேதுங் கருத்தொணான். 4

நெருக்கி யம்முடி நின்றிசை வானவர்
இருக் கொடும் பணிந்தேத்த விருந்தவன்
திருக் கொடுமுடி யென்றலுந் தீவினைக்
கருக் கெடும்இது கைகண்ட யோகமே. 5

## 11. சேக்கிழார் பன்னிரண்டாம் திருமுறை
## பெரிய புராணம்

அப்பதியின் கண் அமர்ந்து சிலநாளில் அங்ககன்று
துப்புறழ்வே ணியர்தானம் பலவுந்தொழு தருளி
முப்புரிநூ லுடன்தோ லணிமார்பர் முனிவரொடும்
செப்பருஞ்சீர் திருப்பாண்டிக் கொடுமுடிசென் றணைந்தார்.
(337)

### திருச்செங்குன்றூர்

பருவமறாப் பொன்னிப் பாண்டிக் கொடுமுடியார் தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலைமகிழ்ந்து சாத்தி
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர் தம்
பொருவிறா னம்பல போற்றிக் குணதிசைப் போதுகின்றார்.
(338)

### சுந்தரர்

(ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்)

பரவிஅப் பதிகத் திருக்கடைக் காப்புச்
சாத்திமுன் பணிந்(து) அருள்பெற்றுக்
கரவில்அன் பர்கள்தங் கூட்டமுந் தொழுது
கலந்தினி திருந்துபோந் தருளி
விரவிய ஈங்கோய் மலைமுத லாக
விமலர்தம் பதிபல வணங்கிக்
குரவலர் சோலை அணிதிருப் பாண்டிக்
கொடுமுடி அணைந்தனர் கொங்கில். (85)

கொங்கினிற் பொன்னித் தென்கரைக் கறையூர்க்
கொடுமுடிக் கோயில் முன் குறுகிச்
சங்கவெண் குழையார் உழைவலஞ் செய்து
சார்ந்தடி அன்பினில் தாழ்ந்து

பொங்கிய வேட்கை பெருகிடத் தொழுது
புனிதர்பொன் மேனியை நோக்கி
இங்கிவர் தம்மை மறக்கவொண் ணாதென்
றெழுந்தமெய்க் குறிப்பினில் எடுப்ப. (86)

அண்ணலார் அடிகள் மறக்கினும் நாம
அஞ்செழுத் தறிய எப்பொழுதும்
எண்ணிய நாவே இன்சுவை பெருக
இடையறா தியம்பும்என் றிதனைத்
திண்ணிய உணர்விற் கொள்பவர் மற்றுப்
பற்றிலேன் எனச்செழுந் தமிழால்
நண்ணிய அன்பில் பிணிப்புற நவின்றார்
நமச்சிவா யத்திருப் பதிகம். (87)

உலகெலாம் உய்ய உறுதியாம் பதிகம்
உரைத்துமெய் உணர்வறா ஒருமை
நிலவிய சிந்தையுடன் திருவருளால்
நீங்குவார் பாங்குநற் பதிகள்
பலவுமுன் பணிந்து பரமர்தாள் போற்றிப்
போந்துதன் மலர்ப் படைப்பைக்
குலவும்அக் கொங்கிற் காஞ்சிவாய்ப் பேரூர்
குறுகினார் முறுகும்ஆ தரவால். (88)

## 12. கபிலதேவ நாயனார்

### பதினோராந் திருமுறை—திருவிரட்டை மணிமாலை

நிறம்பிறிதா யுளமெலிந்து நெஞ்சுருகி வாளா
புறம்புறமே நாள்போக்கு வாளோ—நறுந்தேன்
படுமுடியாய பாய்நீர் பரந்தொழுகு பாண்டிக்
கொடுமுடியாய் என்றன் கொடி.

## 13. அருணகிரியார் திருப்புகழ்

தனதனத் தனனந் தனதான
தனதனத் தனனத் தனதான

இருவினைப் பிறவிக் கடல்மூழ்கி
இடர்கள்பட் டலையப் புகுதாதே
திருவருட் கருணை ப்ரபையாலே
திரமெனக் கதியைப் பெறுவேனோ

அரியயற் கறிதற் கரியானே
அடியவர்க் கெளியற் புதநேயா
குருவெனச் சிவனுக் கருள்போதா
கொடுமுடிக் குமரப் பெருமாளே.

தாந்தத் தனதன தாந்தத் தனதன
தாந்தத் தனதன தனதான

காந்தட் கரவளை சேந்துற் றிடமத
காண்டத் தரிவைய ருடனூசி
காந்தத் துறவென வீழ்ந்தப் படிகுறி
காண்டற் கனுபவ விதமேவிச்
சாந்தைத் தடவிய கூந்தற் கருமுகில்
சாய்ந்திட் டயில்விழி குழைமீதே
தாண்டிப் பொரவுடை தீண்டித் தனகிரி
தாங்கித் தழுவுதல் ஒழியேனோ
மாந்தர்க் கமரர்கள் வேந்தர்க் கவரவர்
வாஞ்சைப் படியருள் வயலூரா
வான்கிட் டியபெரு மூங்கிற் புனமிசை
மான்சிற் றடிதொழு மதிகாமி
பாந்தட் சடைமுடி யேந்திக் குலவிய
பாண்டிக் கொடுமுடி உடையாரும்
பாங்கிற் பரகுரு வாங்கற் பனையொடு
பாண்சொற் பரவிய பெருமாளே.

## 14. வடிவுள்ளநாயகி பஞ்சரத்னம்.

(வித்வான். வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர் இயற்றியது.)

அம்மானைக் கொண்டா னணிமா னிடத்தளித்த
நம்மானைக் கன்றினையே நாடு.

சீர்கொண்ட பாம்பணைமேற் றுயில்மாலும் திசைமுகனும்
ஏர்கொண்ட தேவர்கள்யாவரும் போற்றவிருந் தருள்செய்
பேர்கொண்ட பாண்டிக்கொடுமுடி லிங்கர்ப் பிரிந்தறியா
வார்கொண்ட கொங்கைத் திருவேகறைசை வடிவம்மையே. (1)

காரொன்று கூந்தலினனொன்று நீண்முடி காவிவிழி
சீரொன்று சோதிவதனம்புன் மூரல் செழுந் தரளத்
தாரொன்று கொங்கையென் னெஞ்சத்தொளிரு நின்றன்மை
கண்டேன்
வாரொன்று சோலைமதிதோய் கறைசைவடி வம்மையே. (2)

கற்றாருறவுங் கல்லாதார்ப் பிரிவுமெக் காலத்திலும்
வற்றாத வாழ்வு நின்வார்கழற் கன்பும்வல் வஞ்சகர்பால்
சற்றாயினுஞ் செலவேண்டாத் தகைமையுந் தந்தெனையாள்
மற்றேருழவர் வயல்சூழ் கறைசை வடிவம்மையே. (3)

விருந்தென்றுநோய்க ளுடலினைப் பற்றமிக மெலிந்தே
மருந்தொன்றை நாடியலையுமென் மீதினில் வஞ்சகஞ்சேர்
திருந்தொன்றி லாதகயவர்மென் மேற்செயுந் தீங்குகளில்
வருந்தமுடியா தருள்வாய் கறைசை வடிவம்மையே. (4)

இல்லையென்போர்க் கிலையென்னா துதவு மியல்புடனே
வல்லையென்போர்க் குத்துணைசெயும் வன்மையும் வாய்ந்திடச்
செய்
தல்லையுறுத்தெம் வினைமா சொழிப்பை யரையத்திலே
மல்லிகைமுல்லை மணமார் கறைசை வடிவம்மையே. (5)

## 15. வேள்விக் குடிச் செப்பேடு

*கொன்னவின்ற நெடுஞ்சுடர்வேல் கொங்கர் கோமான்*
*கோச்சடையன்*
*மற்றவர்க்குப் புத்திரனாய் மண்மகளது பொருட்டாக*
*மத்தயானை செலவுந்தி மானவேல் வலனேந்திக்*
*கடுவிசையா லெதிர்ந்தவரை நெடுவயல்வாய் நிகரழித்துக்*
*கறுவடைந்த மணத்தவரைக் குறுவடையாக் கூர்ப்பழித்து*

*மன்னிகுறிச்சியுந் திருமங்கையு முன்னின்றவர் முரணழித்து*
*மேவலோர் கடற்றானை யோடேற் றெதிரேய் வந்தவரைப்*
*பூவலூர்ப் புறங்கண்டுங்*
*கொடும்புரிசைந் நெடுங்கிடங்கிற் கொடும்பாளூர்க் கூடார்*
*கடும் பரியுங் கடுங்களிறுங் கதிர்வேலிற் கைக்கொண்டுஞ்*

*சேவ......*
*கூடாத பல்லவனைப் குழும்பூருட் டேசழிய*
*எண்ணிறந்த மால்களிறு மிவுளிகளும் பலகவர்ந்தும்*
*தரியலராய்த் தறித்தவரைப் பெரியலூர்ப் பீடழித்தும்*
பூவிரியும் பொழிற்சோலைக் காவிரியைக் கடந்திட்டு

அழகமைந்த வார்சிலையின் மழகொங்கம் அடிப்படுத்து
மீன்டொழிய மணிஇமைக்கு மெழிலமைந்த
நெடும்புரிசைப் பாண்டிக் கொடுமுடி சென்றெய்திப்
பசுபதியது பங்மபாதம் பணிந்தேத்திக்
கநகராசியுங் கதிர்மணியும் மணமகிழ்க் குடுத்திட்டுங்

*கொங்கர் வங்கறுங் கண்ணிக்*
*கங்கராஜனொடு சம்பந்தஞ் செய்தும்*
*எண்ணிறந்தன கோசகஸ்ரமும்*
*ஹிரண்யகார்ப்பமும் துலாபாரமும்*
*மண்ணின்மிசைப் பலபெய்து மறைநாவினோர் குறைதீர்த்துங்*
*கூடல்வஞ்சி கோழி என்று மாடமதில் புதுக்கியு*

*மறை கடல் வளாகங் குறையாதாண்ட*
*மன்னர் மன்னன் தென்னவன் மருகன்*
*மான வெண்குடை மான்றேர் மாறன்*

*தேர்மாறன் :* **கி.பி. 710 முதல் 740 வரை**

# 16, சோழன் பூர்வ பட்டயம்

(கரிகால் சோழன்) கருவூர் நகர் கடந்து கொடுமுடிக்கு வந்தார். கொடுமுடியிலிருந்துகொண்டு கொடுமுடியிலுள்ள சிவாலயங்களுக்குக் கோவிலும் கட்டி வைத்து குளமும் வெட்டி வைத்து ஊரும் நகரமும் பட்டணமும் கோட்டையும் கட்டிவைத்து அந்தக் கோட்டை நகர அதிகாரத்திற்கு எல்லப்பன் என்கிற ரெட்டியை வைத்து கர்ணீகத்திற்குத் திருக்கணக்கரில் வேலாயுதம் பிள்ளையை வைத்து வைத்த பின்பு சமய முதலியும் சடையப்பனும் இம்மூவருமாகப் பதினெண்சாதிப் பல்குடியும் அழைத்து வைத்து உழவு குடியான பதினெண்சாதிப் பல குடிக்கும் முதன்மையாக வேளாளரில் கந்தப்பனை வைத்து செட்டிக்குக் கவறை வலைஞரில் நாகப்பனை வைத்த பின்பு கொடுமுடி ஆலயத்திற்கு சுப்பிரமணிய பண்டிதரைக் கொண்டு புண்ணியாங்கப் பிரதிட்டையும் பண்ணி வைத்து அந்தக் கோயிலுக்குச் சோழன் சேரனைக் கொண்டு ஆயிரம் பொன் கிராமமும் நூறு பொன் சுங்கத் தீர்வையும் நூறுமிடா விரைப்பாடு நஞ்சைப் பூமியும் நூறுமிடா விரைப்பாடு புஞ்செய் பூமியும் விடுவித்து விட்ட மானியத்திற்கு கலச்சாகரம் பொடிவித்து அந்தக் கொடுமுடி ஆலயத்தில் விட்டமானியத்தில் சமய முதலிக்குப் பத்தில் ஒன்றென்று கண்டு அந்த ஆலயத்தூணில் கலச்சாகரம் பொடி வைத்து அந்த தாரையும் திருவையாற்றிலிருக்கின்ற மெஞ்ஞான சைவாசாரர் வமிசத்தில் குமர சுப்பிரமணிய பண்டிதரையும் அவருக்குள்பட்ட காரியத்தார்களையும் ஆலயத்திற்கு நம்பி முதலாகிய திருவலகு வரைக்கும் முதன்மை நாட்டாண்மைக்குச் செங்கோட முதலியை வைத்து அந்தக் கோயிலுக்கும் கோயில் மணியம் கணக்குக்கு அத்தப்ப முதலியை வைத்து நம்பி முதன்மைக்கு வேல நம்பியை வைத்து நாகபாசத்தவரில் சந்திரசேகர நட்டுவனை வைத்து தாசியில் வள்ளியை வைத்து இவர்களுக்கெல்லாம் ஓலைப்பட்டயம் எழுதிக்கொடுத்து சமய முதலி

கையொப்பமிட்டு அவரவர் கையில் பட்டையமும் பாக்கு வெற்றிலையும் கொடுத்து நிருதி செய்தபிறகு சமய முதலிக்கும் சடையப்பனுக்கும் ரங்கப்ப செட்டிக்கும் சோழன் சேரன் பாக்கு வெற்றிலை கொடுத்து அவர்களையும் அழைத்துக் கொண்டு கொடுமுடி நகர் கடந்து வெஞ்சமாக் கூடத்திற்கு வந்து...

குறிப்பு : இதில் கரிகாற் சோழன் என்பவன் மூன்றாவது குலோத்துங்கனாக இருக்கலாம் என்று கருதுகிறார்கள்.

**கலச்சாகரம் = கல்வெட்டு**

# 17. பிரான்சிஸ் புக்கானன் குறிப்பு

*1800 ஆம் ஆண்டு நவம்பர் பத்தாம் நாள் பாசூரிலிருந்து கொளாநல்லி வழியாக கொடுமுடி வந்து சேர்ந்தார். அவர் குறிப்பிடுவது வருமாறு :*

I went eight hours to CODOMUDI, a town on the bank of cavery. The road is interrupted by several torrents, swelled much by the heavy rains. A great part of the route led me through a country fully cultivated and inclosed; and although not so well wooded as England, yet I think on the whole, the most beautiful that I have seen in India. The cavery, which at present is a noble river and many hills scattered through the country add much to the beauty of the scenery.

The soil is, however, in general poor and near CODOMUDI many of the fields are waste. CODOMUDI has a temple, said as usual to be of great Antiquity, and provided with an establishment of II Brahmans and 21 musicians and dancing woman. It is a poor building; but this being a holiday, it is crowded with multitudes of all ages and both sexes, many of whom prostrated before the images. The houses in CODOMUDI are 118 of which 28 are occupied by brahmins. It is a new town and money has been advanced to assist the people to build houses. COLANELLY which we passed on the way has been deserted. At this place a canal is taken off the Caveri without the assistance of a dam. A canal of this type is called a CORUM (கொறம்பு). In the dry season it is carriedacross the channel across the Noyel and waters the fields near POGOLUR.

The Brahmans who now live here were formerly all vaidikars or men dedicated to religious meditation; and in Hyder's Government lived on the opposite banks of the Caveri, where they had Enams, or free lands. Having lost this property, they have been obliged to rent some lands, which they cultivated by means of their servants.

# இத்துடன் படிக்க வேண்டியவை


ச. கா. சுப்பிரமணிய பிள்ளை—இலக்கிய வரலாறு
முதல் பாகம்—4. கடைச்சங்க வரலாறு—பக் 94, 95
& 6. கடைச் சங்கப் புலவர் வரலாறு—பக் 127.

Dr. இரா. நாகசாமி—Rare Bronzes from kongu country
Lalith Kala No 9, April 1961.

இரா. பி. சேதுப்பிள்ளை—ஊரும், பேரும்

இராதாகிருட்டிணப்பிள்ளை—அறம் காத்த அரண்கள்

தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான்—வேங்கடம் முதல் குமரி வரையில் காவிரிக் கரையில்

கொடியன்—பதிற்றுப் பத்துச் சேரர் வழிமுறை
—கொங்கு முதல் தொகுதி 1971 பக் 27—33

கொடுமுடி ச. சண்முகன்—குறும்பொறைக் கோமான்
— கொங்கு 2ம் தொகுதி 1972 பக் 75-81

கொடுமுடி ச. சண்முகன்—குறும்பொறை நாடு
—ஈரோடெக்ஸ் வெள்ளிவிழாச் சிறப்பு மலர் 22—10—73

திருப்பாண்டிக் கொடுமுடி
—கொங்கு 3ம் தொகுதி 1973 பக் 215—220

கொடுமுடி ச. பிரகதம்—வரலாற்றில் சில ஒற்றை ஏடுகள்
—கொங்கு 4ம் தொகுதி 1974 பக் 254—256

வே. ரா. தெய்வசிகாமணிக் கவுண்டர்
—வடவுள்ள நாயகி பஞ்சரத்னம்

தலபுராணம்—கந்தசாமி முதலியார் பாடத் தொடங்கியதை சாமக்குளம் வெங்கட்ரமணதாசர் முடித்தாராம்.

அங்கமுத்து செட்டியார்—கொடுமுடி நித்யானந்தபோத விளக்கம்

கொடுமுடி ரதோற்சவச் சிறப்பு

அருட்கவி சேதுராமன்—சில பாடல்கள்

மலைக் கொழுந்து நாவலர்—கொடுமுடிக் குறவஞ்சி நாடகம்.

# 19. தென்னிந்திய கோயிற் சாசனங்கள்

Madras Government Oriental Series No CIV
*தென்னிந்திய கோயிற் சாசனங்கள் (பாகம் 1)*
South Indian Temple Inscriptions (Volume I)

General Editor:
T. Chandrasekharan, M. A., L. T.,
Curator, Government Oriental Manuscripts Library, Madras.

Critically edited with Introduction & Notes by
T. N. Subramaniam
(Devasthanam Epigraphist, Tiruvannamalai Adhinam, Kunnakkudi) T 1904

1953

**பக்கம்** 231

**கொடுமுடி** Kodumudi

*மூவரும் பாடிய பெருமை வாய்ந்த சிறந்த சிவஸ்தலம். தேவாரத்திலே ஊர்ப் பெயர் கறையூர் என்றும் கோயில் திருப் பாண்டிக் கொடுமுடி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. சுவாமி யின் பெயர் மகுடேச்வரர் என்று இப்பொழுது வழங்குகிறது.*

**சாசனம்**-251 D 3302-iv-85

*இந்த சாசனத்தின் ஆரம்பம் கிடைக்கவில்லை; பிற்பகுதி மட்டுமே கிடைத்துள்ளது. அதனால் இது எந்த இடத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறதென்பதும் யாருடைய காலத்தைச் சேர்ந்ததென்றும் தெரியவில்லை.*

Only the latter portion of the inscription is available and as such, the place where it is found inscribed and the period to

which it belongs are not known. Seems to record the tax free gift of the villages Vidari alies Tiruchchirrambala nallūr, Elunūrru......Vēdimangalam, Tiruvūñjalūr, vallipuram, Vadivudaiyamangai, Ayyagaram and Tirukkaṭṭuturai to meet the expenses of Māśi Makha festival, worship offerings and repairs to the temple of the Gods Tiruppandikodumudi Aludayar and Peria Tiruvadi i.e. Garuḍa (in the Vishnu Temple?)

Most of the villages granted now exist in the neighbourhood of kodumudi.

Cf. No. 252 below.

.........னாட்டு நழ காவரி ஆளுந்(த) திறப்பாண்டிக் கொடுமுடியாளுடைய நன் நாயனாற்கு பெரிய திறுவடி(னாய) னாயனாற்க்கும் யெறகலி தெவஸ்தானமாக உதகம் பண்ணிக் குடுத்த ஊறாவது. கரையூற் விதறி திறிசித்தம்பல நல்லூறு நன்னாயனாற் திற வெளையாட்டா யெளுனூத்து......... பெதி மங்கலம், திறவூஞ்சலாறும், வள்ளிப்புறம், வடிவுடைய மங்கெயும், அய்யகற திறுக்காட்டுதுறையும் நன்னாயனாற் திறுப்பாண்டிக் கொடுமுடி யாளுடையாறுக்கு பெரிய திறுவடி நன்னாயனாறுக்கு மாசிமகத் திறவள[ா*] யெளுந்தரளவும் தப(று)[ன] மாடியறுள வும் சனக்கால யிவனாந தங்களுக்கு பெருமந் திறவமுது செயிதறுளவும். சாத்துப்படி திருவாராதனமும் திறு பணிகளும் கொறைவ(றை)ற நடத்தி பொந்தறுளவும். இதுக்கு உடலாக யெப்பெய்ப்பட்டப் பாப்-ங்களுக்கும் ஸ்ரீ சுந்திற திறுப்பாண்டி மகாதெவற்க்கும் பெறிய திறுவடி னயனாயறுக்கும் இவ்வூற்கள் உதகம் பண்ணிக் குடுத்தோம். இவ்வூர் யெல்லை யாவத்துக்கும் திறுசூல ஸ்தாபனம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொளுவராக வும்.

சாசனம்-252 D 3302-N-86

அம்மன் சந்நிதியில் அர்த்த மண்டபத்துப் பின்புறத்தில் இருக்கும் சாசனம்.

At the back of the ardha mandapa in front of the Amman shrines. Dated in the 2+1st year, 5th day of the reign of Tribhuvana Chakravartin Konerimaikondan the inscription records the setting up the images of Ilaiya-pillaiyar (Subramanya) and Periyatiruvadi (Garuda) in the temples of Tirup

**pandikkodumudi Aludaiya Nayanar and Pallikonda perumal** respectively by a native of Mayilūr in Muttūṟṟukkūṟṟam of Pandimandalam for the welfare of the king and the grant of 5 **pon** to meet the expenses of worship etc. of these images **from the month of Tai of 21st year.**

*திருபுவன சக்கிறவர்த்தி கொனெரிமைக் கொண்ட.........*
*பாண்டியமறாண திரப்பாண்டிக் கொடிமுடி ஆளுடைய னாயனாறக் கோயில் தானத்தாறுக்கும் பள்ளி(க்) கொண்ட பெறுமாள் கோயில் திரப்பதியாறக்கும் தங்கள் கோயில் பெகெதுததமத்துக்கும் யாயுமகடத்து பொது பொன் அஞ்சும் நமக்கு நண்டாக பாண்டி மண்டலத்து முத்தூட்டுக் குத்தட்டு[1] மயிலூற் ஓடயான் யெளும்பொத.முதியான் யெளுந்தரிளிவித்த யெளய புள்ளையாறுச்கு பெரிய திருவடி னாயனாறுக்கும்[2] அமுதுபடி சாத்துப்படி உள்ளுட்டு வெண்டும் விஞ்கணங்களுக்கும் இரண்டாவதுக்கு யெதிர் ஆண்டு தை மாசம் முதல் தந்தோம். யிப்பொன்னில் ஒரு (பூற) [கூறு] யெளைய புள்ளையாறுக்கும் ஒறுகுறு பெறிய திருவடி நாயனாறுக்கும்' கணக்கறிந்து பொந்த மறி சாதிகளிலே சிலவாக்க. இப்படிக்கு இ[வ்*]வொலை (புடிப்) படிபாடாக, கொண்டு சந்திரா தித்தவரைக்கும் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க. இவை வெட்சியூற ஓடயான் யெழுத்து ஆண்டு யிரண்டாவதுக்கு யெதிறாவது வருஷம் னாள் அஞ்ச. இவை சுந்திற பாண்டிய காலிங்கறாயன் கை யெளுத்து.*

*சாசனம்* 253] D 3302-v-87

On the front side of the same. A damaged record which seems to register the taxfree gift of 20 ma of land in vidari alais Tiruchitrambalanallur to the Gods Tiruppandikkodumudi Aludaiya Nayanar and Tiruchitrambala Nalludaiyar of Vidari as iraiyili devadana from the 6th year [36] th day of a king whose name is not specified probably after deducting the 4 ma of land given taxfree nattavar and merchants (nagrattar) of Melkarai Araiyanadu. The inscription also seems to state that the village was lying waste and deserted previously and it was reclaimed constructing a dam across the Odai. The signatory is Sundara Pandya kalingarayan.

---

1. 'முத்தூற்றுக் கூற்றத்து' என்று வாசிக்க.
2. 'இளய பிள்ளையாருக்கும் பெரிய திருவடி நாயனாருக்கும் என வாசிக்க.

அம்மன் சந்நிதியில் கர்ப்பக்கிருகத்தின் முன்புறத்தில் உள்ளது.

திருப்பாண்டி கொடுமுடியா(று)[ஞ]டய னாயனாற்கு தெவஸ்தானம் விதிறியான திறுச்சித்தம்பல னல்லூறில் வெள்ளெ குழுமவறகுண செறை யிங்காலம் ஒடே குலப்பட்ட இப்பறப் கெடைக்கயில்—அடைத்து—நீற்நிலம் பயிற் செயும் அளவில். (ப்) பண்ணீற் அடிக்கொலா அயிஞூறு குளிக் கொண்டது ஒரு மாவாக திறப்பாண்டிக் கொடுமுடியில் [.........] பலனாயனாற்கு விதறியான சித்தம்பல நல்லூற் னாயனாற்கு[3] முட்டுட்டு கையில் நெலம் யிறுவது மாவும் திரப்பாண்டிக் கொடு முடியாருக்கு வெதிறியான திருச்சித்தம்பல நல்ல னயினார்க்கும் யிவை யிரையிலி படகு பட்டனிலம் நாலுமாவும் மேல்கரை அரையனாட்டாறுக்கும் நகரத்தாறுக்கும் யெரையிலி னிக்கி...— யிவ்வூற் குடினிங்கா தெவ(ஸ்)தானமாக திறப்பாண்டிக் கொடுமுடி யாறுக்கும் வெதறியான திறச்சித்தம்பல நல்லுடையாறுக்கும் யெறயிலி தெவ(ஸ்)தானமாகக் குடுத்தது. யாண்டு[4] ஆறாவது க காள பூபபததியாற் இறை சந்திரபாண்டி காலிங்கறாயன் யெழுத்து.

சாசனம் 254] [D 3302-iv-88

மகுடேசுவர சுவாமி கோயில் கர்ப்பகிருகத்தில் வடபுறம் எழுதியிருப்பது.

On the north wall of the central shrine in the temple. Record dated in the 27th year of the Kongu king Vira Narayana Ravi varman regiserting the tax free gift of the village Unjalur in Melkarai Araiya Nadu of Adhirajaraja mandalam, fixing the income from the same in gold and paddy to the God Tirruppandi kodumudi Mahadeva at Karaiyur in Kaverinadu, a subdivision of Adhirajaraja mandalam to meet the expenses of offerings, worship etc and celebrating the monthly natal star of the king and the grand festival [Makham] in the month of Masi ending with the sacred bath from that year.

---

3. 'முற்றாட்டுகையில்" என வாசிக்க
4. 'நான் முப்பத்தாறு' என இருத்தல் வேண்டும்.

ஸ்வஸ்தி ஸ்ரீமன் கொவிற னாறாயண யெறவி பன்மர்க்[கு] திறுவெளுத்துயெட்[டு] செல்லா னண்ட ஆண்டு யிறுவத் தெளாவது அதிறாசறாச மண்டலத்துட் நாட்டுக் காவிரி னாட்டுக் கரையூற் திறப்பாண்டிக் கொடுமுடி மகாதெவறுக்குயிம் மண்டலத்து மேல்கரை அரையனாட்டு ஊஞ்சலூரை யாண்டு யிறுவத்தியெளாவது முதல் திருப்பாண்டிக் கொடுமுடி மகா தெவற்க்கு யெறயிலி தெவஸ்தானமாக நாம் பொறந்த நாள் மாசம் தெதி பூ சாதித்தறுளவும், மாசி மாதம் திறுவளா யெளுந் தருளவும், ஸ்தபண(ம்) மாடி அறுளவும், பலபடி நிவிந்தங்களுக்கு பெறினந் திறவமுது செயிதறுளவும் யிதுக்கு ஒடலாக யிவூர் இருக்கும்(க்) காரைக் கண்டது தொளை நொறை ........... இந்த பொன் யெம்பளத்து யெளும் அஞ்செ முண்டும் மஞ்சாடியும் குண்டியும் யொ நிா முண்ணூத்தி னாற்பத்தி அங்கலநெ தூணியும் யிவ்வூரில் மட்டும் யெற்பயப்பட்டப் பாட்டங்களும் திறுப்பாண்டிக் கொடுமுடி மகாதெவற்கு குடுத்தோம். இவ் வூறில் எல்லையாவது கிள்பாறக் கெல்லை யெமுகரைக்கும் ஆணங்குக்கு மெல்ப் படப்புக்கு குமறிக் கயத்துக்கும் மெறக்கு தென்பாக்—.....யெட்டுக் கறட்டுக்கும் மன்னாங் காட்டுக்கு வடக்கு மெல்பாறக் கெல்லே அத்திறாப்பாளிக்கும் களுந்த பாரைக்கும் மூசுகரைக்கும் கௌக்கும் வடபாறக் கெல்லெ—புல்லி கல்லூறுக்கும் தெறக்கும் இதற் கேயிதை யிவ்வூற் நாங் கெல் லைக்கி உள்ப்பட்ட நெலம் யாவ[த்]தும் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதாகவும்.

சாசனம் 255] [D 3302-iv-89

காவேரி கண்ட விநாயகருடைய திருப்பணியில் எழுதி யிருக்கும் சிலாசாசனம்.

இதைத் தொடர்ந்து அரசனுடைய பதினாலாம் ஆண்டுச் சாசனம் ஒன்றும் காணப்படுகிறது.

In the shrine of Kaverikanda Vinayaka. Record dated in the 2nd year chittirai 24 of the reign of Tribhuvana chakravartin Sundara Pandya deva registering the grant of the village Vemburi alias Kaudiyadevanallur as Kuḍiniṅga dēvadāna to the God Tiruppandikkodumudi Aludaiya Nayanar by the nāṭṭavar of Pūnduṟai Nāḍu when they assembled in the ulaga

Viṭaṅka trikkāvaṇām of the temple, to meet expenses of worship, offerings etc and the festival of Tirumakham [in the mouth of Masi]. The temple of God Tiruppandi kodumudi Mahadeva is stated to be a kāṟaiyūr in Kāvēri nādu, a sub division of Adhirajaraja mandalam.

At the end of the inscription there is another separate record dated 14th year of Probably the same king, registering the grant of 4½ vēli and 4 ma of land in Ulindankurichchi alais Muḍikoṇḍa dēvam [paṟṟu] in Veṅgālanādu of the same mandalam.

[அ]

ஸ்வஸ்தி ஸ்ரீமன் திருபுவன சக்கறவற்த்திகள் ஸ்ரீ சுந்திர பாண்டிய தேவற்க்கு யாண்டு றெண்டாவது சித்திரை மாதம் உயச. தி—னாள் பூந்துரை னாட்டுவறொம் நெறைவறை நெறந்து கொரைவரை கூடி திருப்பாண்டிக் கொடுமுடியில் உலகவெடங்க திருக்காவணத்தில் யிறக்கையில் ஓடயாற் திருப் பாண்டிக் கொடுமுடியாளுடைய னாயனாற் குனாங்கள் வுதகம் பண்ணிக் குடுத்த வூறாவது னாங்களனாட்டு வெம்புறியான கண்டியதெவ னல்லூறு ஒடயாற் திருப் பாண்டிக் கொடுமுடி ஆளுடைய னாயனாற்கு யிவ்வூற் குடினீங்கா தெஸ்தாமாவ தாகவும் யிவ்வூற் னாங்கெல்லைக்குள்ப்பட்ட நிலமாவது நஞ்சை புஞ்சை நாங்கெல்லைக்கி உளப்பட்டது. மெல் னோக்கிய மறமும் கிள்னோக்கிய கெணறும் நாங்கெல்லைக்குள்ப்பட்ட நிலமும் தெவஸ்தானமாக இவுற்க்கு நடத்திக் கொள்ளுவதாகவும், இவ் வூறுடய திருப்பாண்டிக் கொடுமுடியாளுடைய னாயனாற்க்கு திறமகம் திறநாளைக்கிம் அமுதுபடி சாத்துப்படி பூசெப்படி நிமித்தகட்கு மட்கு யெப்பறப் பட்டதுக்கும் வுடலாகதாக* யிவூற் குடுத்தோம். யிவூற்க்கடமை குடிமை (சிட்டாயி) [சிற்றாயம்] மன்[று] பாடு தெண்டங்(குட்டம்) [குற்றம்] தறியிறை னாட்டறப் பட்டி வெளமபுஞ்சைப் பாசப் பாட்டம் நல்லெறுது நல்ல பசு நாட்டு வறி ஙத்தவறி சயிதமாயி யெப்பெறப்பட்டதும் யிவ்வூற் னன் னாயனாற்க்கு குடுத்தொம். யிவ்வூற் னாங்கெல்லையும்

---

5. 'நிமந்தங்கட்கும் மற்றும் எப்பேர்ப் பட்டதுக்கும் உடலாவதாக' என்று இருத்தல் வேண்டும்.

திருசூல ஸ்தாபனம் பண்ணிக் கொண்டு கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுவதாகவும் யிவ்வூற்கு அடுத்த வரைக்கும் நடப்பதாகவும் யிப்படி சம்மதிச்சுக் குடுத்தோம். திருப்பாண்டிக் கொடும்டி யாளுடைய னாயனாற்கு பூந்துறை நாட்டு (நாட்ட வற்(வூ)[ஓ]ம். இப்படிக்கி பூந்துறை வெளானல் பெருமாள் யெளுத்து. இப்படிக்கி திருப்பாண்டிக் கொடுமுடியாளுடைய ளுக்கு நன்மை சாதனம் குடுத்தோம்.

[ஆ]

அதிறாசறாஜ மண்டலத்து அக்காவெரி நாட்டுக் காரையூற் திறப்பாண்டிக் கொடுமுடி மகா தெவற்க்கு நமக்கு நன்ண்டாக்க யிம் மண்டலத்து வெங்காலனாட்டு வுளித்தன் குறிச்சியான முடி கொண்ட தெவன் பலத்திலே னாலரை னாலுமாவும் நமக்குப் பதினாலாவது முதல் வுதகம் பண்ணிக் குடுத்தோம். யின்னிலம் னாலரை னாலுமாவும் அமுதுபடிக்கு வெண்டும் நிமித்தங்களுக்கு உடலாக குடுத்தென்.

# 20. தற்போதுள்ள கல்வெட்டு

ஸ்வஸ்ஸித ஸ்ரீ மகா மண்டலேசரான ரிமப மாலகா பாலமக மகாதுவச — மதிகுலதீப — திரிபுவனச் சக்கரவர்த்திகளாகிய கொவந்—சுந்தரபாண்டிய கேசரி வன்மரான தேவர்க்கு யாண்டு இரண்டாவது மாசி மாதம் 14 தேதி ஆதித்தவாரமும் சித்தநாம யோகமும் பாச வர்க்கணமும் கூடிய இந்நாளில் சொகுமண கமல திரிபுவன மகாதேவ தேவோத்தமன்—செம்புத் தீவில் திராவிட தேசத்தில் தெட்சின கயிலாசத்தில்—யெமாகிய மேல் கரை யரைய நாட்டில் தடமலர் நற்காவிரி சூழ்ந்த திருப்பாண்டிக் கொடுமுடியாளுடைய நன்னாயனார்க்கும் பெரிய திருவடி நயனற்கும் இறையிலி தேவதானமாக உதகம் பண்ணிக் கொடுத்த ஊராவது :-

கரையூர் விதரித் திருச்சிற்றம்பல நல்லூர் நன்னாயனார் திருவிடையாட்டத் தெழுநூற்றுப் பெதி மங்கலம் திரு ஊஞ்சலூர் வள்ளிபுரம் வடிவுடை மங்கையும் ஐநகர் திருக் காடுதுறையும் —நாயனார் திருப்பாண்டிக் கொடுமுடி ஆளுடையார்க்கும் பெரிய திருவடியாகிய நன்னாயனார்க்கும் மாசிமகத் திருவிழா எழுந்தருளவும் த்பனமாடியருளவும் சற்கால நிபந்தங் களுக்குப் பெருந்திருவமுது செய்தருளவும் சாத்துப்படி திருவாரா தனமும் திருப்பணிகளும் குறைவற நடத்திப் போந்தருளவும் இதுக் குடலா யெப்பயப் பட்டங்களுக்கும் ஸ்ரீ சுந்தரத் திருப் பாண்டிக் கொடுமுடி மகாதேவர்க்கும் மிவ்வூர்கள் உதகம் பண்ணி கொடுத்தோம். இவ்வூர்கள் எல்லா இடத்திற்கும் திரிசூல தாபனம் சக்கர தாபனக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வ தாகவும்.

—திருப்பாண்டிக் கொடுமுடிக் கோயில்கள் வரலாறு.
தேவஸ்தான வெளியீடு 1963.

குறிப்பு :- தென்னிந்திய கோயில் சாசனங்கள் நூலின் 251 காண்க. அதன் முழு வாசகம் இக் கல்வெட் டாகும். இன்றும் பெருமாள் கருவறைப் பின் சுவரில் உள்ளது.

# 21. மைசூர் தொல்லெழுத்துத் துறை

படியெடுத்தவை

No. 283 of 1961-62

This is an inscription in Tamil characters of about the 17th century dated in the second year of the reign of Tribhuvana-chakravarttigal alias Vīra-Sundarapāṉṉḍyakēsarivarmaṉ a ruler of Kongu. The details of the date are Masi 14, Sunday, Maghā,

It records a gift of the villages of Kaṟaiyūr, Tiruch-chiṟṟambalanallūr, Eḷuūṟṟuppedimaṅgalam, Tiru-ūñchalūr, Vallipuram, Vaḍivuḍaiyamaṅgai, Aiyaṇ-karu and Tirukkāḍu-tuṟai to the gods Āḷuḍaiya-nāyaṇar and Periya-Tiruvaḍi-nāyaṉar of Tiruppāṇḍikkoḍumuḍi by Tribhuvana-mahādēva-dēvōttaman to provide for the Māśi-magham festival sacred bath, grand food-offerings, anointment and other services on auspicious occasions.

No. 284 of 1961-62

This is a fragmentary Tamil record in characters of about the twelfth century A.D. Mentions a Rājakēsarivarman, who may be a ruler of Kongu. Refers to Dēvar Ambarnātha-perumān, the god of Tiraikkoṟṟavāyilkkuḍi and śiṭṭa (sishṭha)-perumakkaḷ.

No, 286 of 1961-62

This is a fragmentary Tamilrecord in characters of about the eleventh century, A,D. Seems to record a gift of gold to provide for rice etc., (details lost) obviously for food-offerings to a deity (name lost).

நன்றி: தலைமைத் தொல்லெழுத்தியலார், மைசூர்
கடித எண்40/2/69-250
நாள் 22-10-1969